ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2031/48 - 2017 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2017.08.11

2031/48 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு.: DEV/LND/02/ACQVI/04-14.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவின் நாஒடுன்ன கிராம அலுவலர் பிரிவில் நாஒடுன்ன கிராமத்தில் அமைந்துள்ளதும் ஆரம்பப் பட இலக்கம் மாற/2698 இல் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள காணி (விஸ்தீரணம் 2.3033 ஹெக்டயார்).

**துண்டு இலக்கம் 01**

காணியின் பெயர்: கொரக்கபதுரஹேன அல்லது கொரக்கஹஹேன பபியலகெ குருந்து வத்த மற்றும் வெலன்கெட்டிய; விபரம்: வீட்டுத் தோட்டம் கலப்புப் பயிர்ச் செய்கையைக் கொண்டது; விஸ்தீரணம்: 2.3033 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தெவிநுவர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தல் வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற் கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

ரஞ்ஜித் யாப்பா,
காணி எடுத்தல் அலுவலர்/ பிரதேச செயலாளர்,
தெவிநுவர.

பிரதேச செயலகம்,
தெவிநுவர,
2017, யூலை 13.

8 - 912